# நலமான வாழ்வுக்கு நோய்த் தடுப்பு மருந்துகள்



**Published by:**
Health Education Materials Production Unit,
Department of Community Medicine,
Faculty of Medicine,
University of Jaffna.

**Assisted by:**
V.Koculen(2008/FM/032),
K.Sujanthan(2007/FM/054),
S.Sasikanth(2008/FM/059)
Q.Vinushiya(2008/FM/076),
P.Thusyanthy(2008/FM/072),

**Sponsored by:**

mercy MALAYSIA

**Implemented by:**

CONSORTIUM OF CHA HUMANITARIAN AGENCIES

# தடுப்பு மருந்து அட்டவணை
## (Immunization schedule)

| வயது | தடுப்பு மருந்தின் வகை |
|---|---|
| பிறந்தவுடன் | பீ.சி.ஜி (B.C.G) |
| 2 மாதம் பூர்த்தியான பின் | முக்கூட்டு 1 அல்லது ஐங்கூட்டு 1<br>போலியோ 1<br>மஞ்சள் காமாலை B 1 |
| 4 மாதம் பூர்த்தியான பின் | முக்கூட்டு 2 அல்லது ஐங்கூட்டு 2<br>போலியோ 2<br>மஞ்சள் காமாலை B 2 |
| 6மாதம் பூர்த்தியான பின் | முக்கூட்டு 3 அல்லது ஐங்கூட்டு 3<br>போலியோ 3<br>மஞ்சள் காமாலை B 3 |
| 9மாதம் பூர்த்தியான பின் | சின்னமுத்து |
| 12மாதம் பூர்த்தியான பின் | யப்பானிய மூளைக்காய்ச்சல் (J.E) |
| 18மாதம் பூர்த்தியான பின் | முக்கூட்டு 4<br>போலியோ 4 |
| 3வயது பூர்த்தியான பின் | சின்னமுத்து<br>ருபெல்லா |
| 5வயது பூர்த்தியான பின் | இருகூட்டு<br>போலியோ 5 |
| 12வயது பூர்த்தியான பின் | வயது வந்தவர்களுக்கான இருகூட்டு |
| 13வயது பூர்த்தியான பின் | ருபெல்லா |

## வனத்தில் கொள்ள வேண்டியவை......

1. 6ம் மாதத்தில் இருந்து ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு தடவை 5வயது வரை விற்றமின் A கொடுக்க வேண்டும்.

2. பீ.சீ.ஜி வக்சின் போடப்பட்ட பின்னர் 6வது மாதத்திலும் அடையாளம் இல்லாவிடில் ஐந்து வயதிற்கு உட்பட்டிருப்பின் மாத்திரம் 2ம் தடவையாகவும் வக்சின் போடப்பட வேண்டும்.

3. மேற்குறித்த அட்டவணைக்கு அமைவாக தடுப்பு மருந்து வழங்கப்பட வேண்டும். ஏதேனும் காரணத்தால் பிற்போடப்பட்டால் இயலுமானவரை மிக விரைவில் வழங்கப்பட வேண்டும். அதேவேளை உயிர்ப்புள்ள வக்சின் எனின் 4 கிழமைகளின் பின்னரே அதற்குரிய அடுத்த மருந்து வழங்கப்பட வேண்டும்.

4. தடுப்பூசி வழங்கப்பட்ட பின் சிறிய பக்க விளைவுகள் ஏற்படுவது சாதாரணமானது. (உ-ம்- ஊசி போட்ட இடத்தில் சிவந்து வீங்கியிருத்தல் , தோலுக்குக் கீழ் கட்டியாக இருத்தல், காய்ச்சல், பருக்கள் போன்றவை) இவற்றிற்கு பிரத்தியேக வைத்தியம் தேவையில்லை.

5. தடுப்பூசி வழங்கிய பின் மிக அரிதாக வைத்தியசாலை அனுமதி தேவைப்படலாம்.
(உ-ம்- காய்ச்சலுடனான வலிப்பு, மிகவும் பாரதுாரமான ஒவ்வாமை, உடல் முழுதும் பருக்கள் போன்றவை). இவ்வாறான விளைவுகள் ஏற்படின் உங்கள் குடும்ப சுகாதார உத்தியோகத்தர், பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார தாதிய உத்தியோகத்தர், சுகாதார வைத்திய அதிகாரி அல்லது தடுப்பூசி ஏற்றிய வைத்தியருக்கு அறிவிக்க வேண்டும்

6. உங்கள் பிள்ளைக்கு தடிமன் , இருமல் போன்ற சிறிய நோய் நிலைமைகளின் போதும், உடல் வெப்பநிலை 100°F ஐ விடக் குறைவாக உள்ள சிறிய நோய்களின் போதும் தடுப்பு மருந்து வழங்க முடியும்.
100°F ஐ விட உடல் வெப்பநிலை கூடிய கடுமையான நோய் நிலைமைகளின் போது தடுப்பு மருந்து வழங்கல் ஆகாது

# கர்ப்ப காலத்தில் ஏற்பு ஊசி வழங்குதல்

கர்ப்ப காலத்தின் போது போடப்பட வேண்டிய ஏற்பு ஊசியின் எண்ணிக்கையும் ,போடப்பட வேண்டிய கால இடைவெளியும் கடந்த காலங்களில் அப்பெண் பெற்றுள்ள ஏற்பு ஊசி தொடர்பான பதிவுகளில் தங்கியுள்ளது.

- ஒரு பெண் மேற்குறித்த தடுப்பு மருந்து அட்டவணையின் படி ஏற்பு ஊசி பெற்றிருப்பாராயின் அவர் அதற்குரிய பதிவினை சமர்ப்பிக்கும் இடத்து 10 வருடங்களிற்குள் கர்ப்பம் தரிப்பாராயின் மீண்டும் கர்ப்ப காலத்தின் போது ஏற்பு ஊசி போட வேண்டிய தேவை இல்லை.
- மேற்குறித்த அட்டவணையின் படி பெண்கள் தடுப்பு மருந்து பெறப்படாதவிடத்து கர்ப்ப காலத்தின் போது பின்வரும் முறையில் ஏற்பு ஊசி மருந்து ஏற்றப்பட வேண்டும்.
    - 1வது ஊசி- முதலாவது கர்ப்பத்தின் போது கர்ப்பம் தரித்து 12 வாரங்களின் பின்னர்
    - 2வது ஊசி- முதலாவது கர்ப்பத்தின் போது (முதலாவது ஊசி இடப்பட்டு 6-8 கிழமைகளின் பின்னர்)
    - 3வது ஊசி- இரண்டாவது கர்ப்பத்தின் போது கர்ப்பம் தரித்து 12 வாரங்களின் பின்னர்
    - 4வது ஊசி- மூன்றாவது கர்ப்பத்தின் போது கர்ப்பம் தரித்து 12 வாரங்களின் பின்னர்
    - 5வது ஊசி- நான்காவது கர்ப்பத்தின் போது கர்ப்பம் தரித்து 12 வாரங்களின் பின்னர்
- மேலே தரப்பட்ட 5 ஏற்பு ஊசி மருந்துகளும் கடந்த காலங்களில் கர்ப்பம் தரித்திருக்கும் வேளையில் சரியான முறையில் பெறப்பட்டிருப்பின் தொடர்ச்சியான கர்ப்பங்களின் போது மேலதிக ஏற்பு ஊசி வழங்கத் தேவையில்லை.

**தடுப்பு மருந்து வழங்கப்படும் நிலையங்கள்-**
**நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு**

| இடம் | நாள்( ஒவ்வொரு மாதத்திலும்) |
|---|---|
| பிரதேச வைத்தியசாலை கோண்டாவில் | 2வது , 4வது செவ்வாய் |
| **PMCU** கொக்குவில் | 1வது புதன் |
| **RDS** கொக்குவில் | 3வது புதன் |
| திருநெல்வேலி **VC** | 2வது புதன் |
| திருநெல்வேலி கிழக்கு | 3வது செவ்வாய் |
| அரியாலை | 2வது வெள்ளி |
| *ஆரம்பிக்கும் நேரம் காலை 7.30 மணி* | |

- போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணத்திலும் தடுப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன.